# பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

மானியக் கோரிக்கை எண்–18

# அறிவிப்புகள்
# 2014–2015

ப. மோகன்
ஊரகத் தொழில்கள் மற்றும்
தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

# பட்டு வளர்ச்சித்துறை

## 1. பட்டு வளர்ச்சித்துறையில் அத்தியாவசிய பணியிடங்களான இளநிலை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புதல்

தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறையின் இளநிலை ஆய்வாளர் பதவியானது அடிப்படை நிலை விரிவாக்கப் பணியாகும். இதற்கு அடுத்த நிலையில் தொழில் நுட்ப சேவை மையத்தில் உதவி ஆய்வாளர்கள் உள்ளனர். மாநிலம் முழுவதும் 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல், நவீன தொழில்நுட்பம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தேவைக்கு ஏற்ப முட்டைத் தொகுதிகள் / இளம்புழுக்கள் விநியோக ஏற்பாடு செய்தல், அரசினால் நிர்ணயிக்கப்பட்ட மல்பரி விரிவாக்கம், பட்டு உற்பத்தி உள்ளிட்ட குறியீடுகளை

தொய்வின்றி எய்தும் நோக்கத்துடன் **2014–2015**ஆம் ஆண்டில் இளநிலை ஆய்வாளர்கள் பதவித் தரத்தில் **150** இளநிலை ஆய்வாளர்களும், **12** உதவி ஆய்வாளர்களும் நேரடி நியமன முறையில் நிரப்ப **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 2. அரசு பட்டுப்பண்ணைகளில் முப்பது பண்ணைக்குட்டைகள் அமைத்தல்

தமிழகத்தில் மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில், பண்ணைக் குட்டைகள், தடுப்பு அணைகள் கசிவு நீர்க்குட்டைகளை உருவாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் அமைத்தல், ஏரி குளங்களில் தூர்வாருதல் முதலிய நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு **2013–2014**ஆம் ஆண்டில் 50 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 2014-2015ஆம் ஆண்டில் மழைநீர் சேகரிப்பை மேலும் ஊக்குவிக்க அரசு பட்டுப் பண்ணைகளில் கூடுதலாக 30 பண்ணைக் குட்டைகள் அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 3. பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்குதல்

தமிழகத்தில் பட்டுத்தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், அதன் மூலம் அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவது அவசியமாகிறது.

2014-2015ஆம் ஆண்டில் 2,000 பட்டு விவசாயிகள் மற்றும் 500 பட்டு நூற்பு தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஒசூரில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்படும். இத்திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக ரூபாய் 49.25 இலட்சம் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 4. உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

தமிழகம் முழுவதும் பட்டு வளர்ப்பு விவசாயிகளை ஊக்கப்படுத்திட அரசினால் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நலத் திட்டங்களில் வீரிய இரக மல்பரி புதிய நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதும் ஒன்றாகும். வீரிய இரக மல்பரி புதிய நடவு செய்யும் பட்டு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபாய் 10,500/– வீதம், அதிகபட்சமாக 5.00 ஏக்கருக்கு ரூபாய் 52,500/– வரை ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2014-2015ஆம் ஆண்டிலும், வீரிய இரக மல்பரி நடவு செய்வதனை ஊக்கப்படுத்த 3,000 ஏக்கருக்கு, மாநில அரசின் பங்காக ரூபாய் 1.05 கோடி மானியம் வழங்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**